**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : DVC.7/2023 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : RW-1 | Village: | திருப்பனந்தாள் |
| Name | : சாகுல்பாட்சா | | |
| | | Taluk : | திருவிடைமருதூர் |
| Father's/Husband's Name | : குப்பகனி | Age | : 50 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of**

**20.11.2025.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் இம்மனுவின் 2 ம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் 4 சகோதரர்கள், 1 சகோதரி. முகம்மது தஸ்லிம் எனது இளைய சகோதரி என்றால் சரிதான். அவருக்கு 2018 ம் ஆண்டு திருமணம் நடந்தது. எங்கு திருமணம் நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது இளைய சகோதரர் திருமணத்தின்போது நான் வெளிநாட்டில் இருந்தேன் என்றால் சரிதான். முகம்மது தஸ்லிம் திருமணத்தின்போது எனது தந்தை உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் இருந்து 2021ம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தேன். எனது தந்தை 2022 ல் இறந்துவிட்டார். எனது தம்பி முகம்மது தஸ்லிம்மின் மனைவிதான் மனுதாரர் என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு எனது தம்பியின் திருமணம் எங்கு நடைபெற்றது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. ஏன் தெரிந்து கொள்ளவில்லை என்றால்

திருமணத்தின்போது நான் வெளியூரில் இருந்ததால் தெரிந்து கொள்ளவில்லை. எனக்கும் எனது தம்பிக்கும் எவ்விர பிரச்சனையும் இல்லை. எனது தம்பி திருமணத்திற்கு முன்பு வெளிநாட்டில் எத்தனை வருடங்கள் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நாங்கள் கூட்டு குடும்பமாகதான் வசித்து வருகிறோம். எனக்கு திருமணம் ஆகி 10 வருடங்கள் ஆகிறது. எனது சகோதரி மும்தாஜ்பேகம் சீர்காழியில் திருமணம் செய்து கொடுத்தார்கள். அவருக்கு திருமணம் ஆன வருடம் தெரியாது. நான் வசிக்கும் வீட்டில் நான், எனது தாயார் ஜகபர்நிஷா, எனது மனைவி ஜீனத்நிஷா, எனது தம்பிகள் முகம்மதுரியாஸ், ஹாஜ்அக்பர் ஆகியோர்கள் வசித்து வருகிறோம். எனது சகோதரர் முகம்து ரியாஸ்க்கும் திருமணம் ஆகிவிட்டது. எனது சகோதரர் ஹாஜ்அக்பர் அவருக்கு திருமணம் ஆகவில்லை. முகம்மது தஸ்லிம் திருமணத்திற்கு பிறகு நான் குடியிருக்கும் வீட்டின் ஒரு பகுதியில் எனது அப்பா குப்பகனி குடித்தனம் வைத்தாரா என்றால் அவ்வப்போது வந்து செல்வார். முகம்மது தஸ்லிம்க்கும் மனுதாரருக்கும் கடந்த 2021ம் ஆண்டு குழந்தை பிறந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த சமயம் நான் வெளிநாட்டில் இருந்தேனா என்றால் ஊரில்தான் இருந்தேன் நான் தெரிந்து கொள்ளவில்லை. தமிழ்நாடு தவ்கித் ஜமாத் திருப்பனந்தாளில் மனுதாரருக்கும் அவரது கணவர் முகம்மது தஸ்லிம்முக்கும் திருமணம் நடைபெற்று அதனை பதிவு செய்துள்ள விவரம் தெரிந்தும் எனக்கு எதுவும் தெரியாது என்று முன்னுக்குபின் முரணாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என்ன விவரம் சொல்லியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்த வழக்கில் எந்தவிதமான வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முகம்மது தஸ்லிம்மும் மனுதாரரும் நான் வசிக்கும் வீட்டில் ஒரு பகுதியில் வசித்தார்கள் அந்த அறை பூட்டப்பட்டுள்ளது யார் பூட்டினார்கள் என்றால் மனுதாரர்தான் பூட்டினார். அந்த

அறைக்குள் மனுதாரர் மற்றும் முகம்மது தஸ்லிம்முக்கு சொந்தமான உடமைகள் உள்ளது என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் இருந்தபோது முகம்மது தஸ்லிம்மும் மனுதாரரும் எங்கள் வீட்டில் ஒன்றாக கூட்டு குடும்பமாக இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வெளிநாட்டில் இருந்து வந்தபோது முகம்மது தஸ்லிம் எங்கள் வீட்டில்தான் இருந்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கை மனுதாரர் மரியம் என் மீதும் எனது தாயார் மற்றும் எனது மனைவி மீதும் எதற்காக போட்டுள்ளார் என்றால் சொத்திற்காக போட்டுள்ளார். எங்களது குடும்ப சொத்துக்களில் மனுதாரர் மரியத்திற்கு உரிமை உள்ளதா என்றால் இல்லை. எனது தம்பி முகம்மது தஸ்லிம்முக்குதான் குடும்ப சொத்தில் உரிமையுள்ளது என்றால் சரிதான்.மனுதாரர் சொத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக நான் சாட்சியம் அளித்தது பொய்யானது என்றால் எனது தம்பி முகம்மது தஸ்லிம்மின் மனைவி என்பதால் அவருக்கும் உரிமை உண்டு என்றால் சரிதான். எனது பெயரிலும் எனது மனைவி, மற்றும் தாயாருக்கு எதிராக கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி காவல் நிலையத்தில் மனுதாரர் எதற்காக புகார் கொடுத்தார் என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் எங்கள் மீது வரதட்சணை கொடுமை என்று கூறி புகார் அளித்துள்ளார். மேற்படி புகாரில் மனுதாரரை காம குரோத வார்த்தைகளால் திட்டி வரதட்சணை கேட்டு கொடுமை படுத்தி வீட்டை விட்டு விரட்டியதாக மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி புகார் சம்மந்தமாக கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஏற்பு சான்று கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. மேற்படி புகார் ஏற்பு சான்றிதழ் இதுதானா என்றால் சரிதான். (தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் நகலுடன் கூடிய மனு ரசீது மசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மனுதாரர் மரியமும் அவரது கணவரும்

நாங்கள் குடியிருக்கும் வீட்டில் ஒரு பகுதியில் வந்து குடும்பம் நடத்துவதற்கு எனக்கு ஆட்சேபனையில்லை என்றால் ஆட்சேபனையில்லை . இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரைக்கு தகவல் சொன்னது யார் என்றால் எனது தாயார்தான் தகவல் சொன்னார். மேற்படி வழக்கு சம்மந்தப்பட்ட விவரம் எனது தாயாருக்குதான் தெரியும் என்றால் சரிதான். மனுதாரர் நாங்கள் வசிக்கும் வீட்டில் அவரது உடைமைகளை எடுக்க வந்தபோது வீட்டில் உள்ளே விடாமல் வெளியே விரட்டி அடித்தீர்கள் என்றால் இல்லை. வீட்டிற்கு வந்த மனுதாரரை விரட்டி அடித்தது சம்மந்தமாக திருப்பனந்தாள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி காவல் நிலையத்தில் புகாரின் விசாரணையில் நீதிமன்ற உத்தரவு பெற்று வீட்டிற்கு செல்லுங்கள் என்று மனுதாரரை அறிவுறுத்தியதால் இவ்வழக்கினை மனுதாரர் தாக்கல் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரருக்கும் எனது தம்பி முகம்மது தஸ்லிம் அவர்களுக்கும் நடந்த திருமணம் காதல் திருமணம் என்றும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் அல்ல என்றும் சொல்லியுள்ள விவரம் பொய்யானது என்றால் சரியல்ல. மனுதாரரின் கணவர் வெளிநாடு சென்ற பிறகுதான் இந்த பிரச்சனைகள் ஏற்பட்டது என்றால் சரிதான். முகம்மது தஸ்லிம் வெளிநாடு சென்ற பிறகு மனுதாரர் கைக்குழந்தையுடன் இருந்தார் என்றால் அவர் அவரது பெற்றோர் வீட்டில் இருந்தார். மனுதாரர் கைக்குழந்தையுடன் நீங்கள் வசிக்கும் வீட்டில்தான் இருந்தார் என்றும் மனுதாரரை நீங்களும் உங்கள் மனைவி மற்றும் தாயார் சேர்ந்து கொண்டு வீட்டை விட்டு அடித்து வெளியே அனுப்பிவிட்டீர்கள் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீடு எனது சம்பாத்தியத்தில் உள்ள வீடு என்றால் இல்லை. எங்களது பூர்வீக சொத்தாகும். எனக்கு இருக்கும் உரிமை போலவே எனது தம்பி முகம்மது தஸ்லிம்முக்கும் உள்ளது என்றால் சரிதான். அதனால்தான் எனது தம்பி முகம்மது தஸ்லிம்

இந்தியாவில் இருக்கும்போது எனது தாயார் மற்றும் சகோதர, சகோதரிகள் மீது கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரிதான். மனுதாரர் நாங்கள் குடியிருந்து வரும் வீட்டில் வசிக்கும் உரிமையை கேட்டும் எங்களிடமிருந்து பாதுகாப்பு மற்றும் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கு குறித்து எல்லா விவரங்களும் எனக்கும் எனது மனைவி மற்றும் தாயாருக்கு தெரியும் என்றும் அவ்வாறு தெரிந்த விவரங்களை நான் மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும் அவரது கணவர் முகம்மது தஸ்லிம்முக்கும் நடந்த திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருப்பனந்தாள் தவ்கித் ஜமாத்தில் நடைபெற்றது என்றும் அதனால் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் அனைத்தும் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை மற்றும் வாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானதல்ல என்றால் சரியல்ல.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P.Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**